This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஓரிரவில் ஒரு ரயிலில்

## 1

*ஓரிரவில் ஒரு ரயிலில் உன்னைக் கண்டேன்*
*பார் முழுதும் ஊடுருவும் மின்னல் கண்டேன்*

ஒரு ராத்திரியிலேயே ரயிலில் அவளைச் சந்தித்து, ஏறக்குறைய கல்யாண ஏற்பாடு வரை வந்து விட்டது. இந்த இன்டர்நெட் யுகத்தில் கூடத் கொஞ்சம் வேகம்தான். அதுதான் நடந்தது.

நான் யார். அவள் யார் என்பதைச் சொல்லுமுன், உங்களுக்கு ஆர்.பி என்னும் ராஜ பண்டிதரை அறிமுகப்படுத்த வேண்டும். அவர்தான் நானும் அவளும் சந்திக்க மறைமுகக் காரணம்.

ஆர்.பி. இந்துக்களின் முக்கியமான தலைவர். அவர் கையசைத்தால் அடிபணிய மத்திய மந்திரிகளும், பிர்லா மனைவிகளும், கோடீஸ்வர செட்டியார்களும், நாயுடுகளும், டால்மியாக்களும் காத்திருக்கிறார்கள், மாநில முதல்வர்கள் மந்திரிசபை மாற்றுமுன், கட்சியைப் பிளக்குமுன், பதவியைத் துறக்குமுன், அம்பானிகள் புதிய பெட்ரோ கெமிக்கல்கள் தொடங்குமுன், பல கட்டடங்களில் ஆர்.பி.யை ப்ரைவேட் ஜெட் பிடித்து ஒரு நடை வந்து, ஓவர்நைட் சந்தித்து, ஒரு வார்த்தை கேட்டுவிட்டுத்தான் செய்வார்கள்.

இந்திய அரசியலின் மறைமுக சூத்ரதாரி என அவரை சொல்கிறார்கள். இதனால் அவருக்கு நண்பர்கள் ஏராளம். அவர் பரம சாதுவாக இருந்தாலும், அவரைச் சுற்றுப்பட்டவர்கள் வன்முறையில் பல வண்ணங்கள் கலந்தவர்கள். அதனால் அவருக்கு எதிரிகளும் ஏராளம். பின்னவர்களிடமிருந்து அவரைத் காக்கத்தான் நான்...

என் பெயர் அஷோக் ஐ.பி.எஸ். தேறின கையோடு, ஸி.ஐ,எஸ்.எஃப்., ஸி.ஆர்.பி,எஃப் என்று இலாகாக்கள் மாறி டில்லி ரா வில் கொஞ்ச காலம் இருந்துவிட்டு, இப்போது மத்திய உள்துறையின் வி.ஐ,பி செக்யூரிட்டி பிரிவில் போஸ்ட்டிங் ஆகி, ஊர் ஊராக சாமியார்கள், அரசியல் தலைவர்கள், உச்சகட்ட மோசடிக்காரர்கள் பின்னால் அலையும் அபாக்கியன்.

இப்போது ஆர்.பி.க்கு பாதுகாப்பாக பாண்டியனில் மதுரைவரை போகிறேன்.

நாளை அவரது பிறந்ததினத்தை ஆரவாரமாகக் கொண்டாடுகிறார்கள். முற்றும் துறந்தவருக்கு எதற்கு பிறந்த நாள் விழா என்று கேட்கமாட்டேன். அது என் கவலை அல்ல. என் கவலை மதுரை ஜங்ஷன்வரை அவரைப் பத்திரமாக சேர்ப்பிப்பது. ஆர்.பி.யை. பார்த்தால் இத்தனை சக்தியுள்ள ஆசாமி என்று தெரியாது. சாந்த சொரூபி. கருகருவென்று தாடி. கன்றுக் குட்டிக் கண்கள், ஊடுருவி மனசுக்குள் குடையும் பார்வை. எப்போதும் உலகத்தை நோக்கி ஒரு புன்னகை. என்னை நேசி என வற்புறுத்தும் குரல். மோகனமாகப் புன்னகைத்தார்.

"அலோ அஷோக், நீங்களும் வர்றீங்களா?" என்றார் ஒன்றுமே தெரியாதது போல்.